பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை

19 03 2025 **WEDNESDAY** 12 40 **PM**

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து பத்திரமாக பூமிக்கு திரும்பியுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட வீரர்களுக்கு தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

2. பிராந்திய மற்றும் சர்வதேச பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், பிரிட்டன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. **Jonathan Powell**—ஐ சந்தித்து பேசினார்.

3. வளர்ந்து வரும் நாடுகள் உலக பொருளாதாரத்தில் சிறந்த பங்காற்றுவதற்கு, வலிமையான பொருளாதார ஒத்துழைப்பு திட்டங்கள் அவசியம் என்று வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. **Pabitra Margherita** கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராமப் பகுதிகளில் நாய் கடித்து உயிரிழக்கும் கால்நடைகளுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படும் என்று மாநில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி கூறியுள்ளார்.

5. சுவிஸ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>>><<<<<<<<**

சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து ஒன்பது மாதங்களுக்குப் பிறகு பாதுகாப்பாக பூமிக்கு திரும்பியுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் உட்பட நான்கு நான்கு விண்வெளி வீரர்களுக்கு தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

நான்கு விண்வெளி வீரர்கள் பத்திரமாக பூமிக்கு அழைத்து வரப்படுவார்கள் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், விண்வெளி வீரர்கள் வெற்றிகரமாக பூமி திரும்புவதற்கு உதவிய **SpaceX** நிறுவனர் திரு. எலன் மஸ்க்-கிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார்.

விண்வெளி மையத்திலிருந்து இந்திய வம்சாவளியினரை சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் உட்பட 4 வீரர்களை பூமிக்கு அழைத்து வந்துள்ளது விடாமுயற்சிக்கு கிடைத்த வெற்றி என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட 4 விண்வெளி வீரர்கள் பத்திரமாக பூமிக்கு திரும்பியுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில். விண்வெளி வீரர்களின் துணிச்சல் மற்றும் எல்லையற்ற மனித ஆற்றலுக்கு கிடைத்த மகத்தான வெற்றி இது என்று குறிப்பிட்டுள்ளார்.

9 மாதங்களுக்கு பிறகு விண்வெளி வீரர்கள் பூமிக்கு பத்திரமாக திரும்பியுள்ளதன் மூலம் புதிய வரலாறு படைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய வம்சாவளியைச்சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் பத்திரமாக பூமிக்கு திரும்பியுள்ளதை ஒட்டுமொத்த உலகமும் கொண்டாடுவதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் கூறியுள்ளார்.

விண்வெளி வீரர்கள் பூமிக்கு திரும்பியிருப்பது விடா முயற்சிக்கு கிடைத்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி என்று தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.

சுனிதா வில்லியம்ஸ் உட்பட 4 விண்வெளி வீரர்கள் பாதுகாப்பாக பூமிக்கு திரும்பியுள்ளதற்கு தமிழக சட்டப்பேரவையிலும் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து வீரர்கள் பூமிக்கு அழைத்து வரப்படுவார்கள் என்ற மக்களின் எதிர்பார்ப்பு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் திரு த வி வெங்கடேஷ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - த வி வெங்கடேஷ்வரன் -56 செகண்ட்ஸ்)*

இதனிடையே, பூமிக்கு திரும்பியுள்ள விண்வெளி வீரர்களுக்கு, புவிஈர்ப்புக்கு உகந்த வகையில் 45 நாட்கள் தங்களை தகவமைத்துக் கொள்வதற்கு ஏதுவான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா தெரிவித்துள்ளது.

சர்வதேச விண்வெளி மையத்திற்கு ஆய்வுப் பணிகளுக்காக சென்ற விண்வெளி வீரர்களை அழைத்து வருவதில் பல்வேறு சிக்கல்கள் காரணமாக காலதாமதம் ஏற்பட்டதை நாசா சுட்டிக்காட்டியுள்ளது.

**>>>>>>><<<<<<<**

பிராந்திய மற்றும் சர்வதேச பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், பிரிட்டன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. **Jonathan Powell**–ஐ சந்தித்து பேசினார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் ரெய்சினா மாநாட்டிற்கிடையே நடைபெற்ற சந்திப்பில், பரஸ்பரம் இருவரும் தங்களது கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் திரு. ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள பதிவில், நேபாளம், தாய்லாந்து, லக்ஷம்பர்க் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து பேசியதாக குறிப்பிட்டுள்ளார்.

**>>>>>>><<<<<<<**

வளர்ந்து வரும் நாடுகள் உலக பொருளாதாரத்தில் சிறந்த பங்காற்றுவதற்கு, வலிமையான பொருளாதார ஒத்துழைப்பு திட்டங்கள் அவசியம் என்று வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. **Pabitra Margherita** கூறியுள்ளார்

புதுதில்லியில் நடைபெற்று வரும் ரெய்சினா மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், லத்தின், அமெரிக்க, கரீபியன் உள்ளிட்ட நாடுகளுடனான வர்த்தகம், முதலீடு போன்ற துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக குறிப்பிட்டார்.

சர்வதேச நாடுகளுடன் இணைந்து செயலாற்றுவதில் உலகின் தென்பகுதியில் உள்ள நாடுகளிடையேயான உறவுகள் முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் கூறினார்.

தென்பகுதியில் உள்ள நாடுகளுடன் கல்வி, தகவல் தொழில்நுட்பம், மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டும் என்று திரு. **Pabitra Margherita** தெரிவித்தார்.

**>>>>>>><<<<<<<**

தமிழகத்தில் நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராமப் பகுதிகளில் நாய் கடித்து உயிரிழக்கும் கால்நடைகளுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படும் என்று மாநில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் கொண்டு வரப்பட்ட கவனஈர்ப்பு தீர்மானத்திற்கு இன்று பதிலளித்து பேசிய அவர், இதுவரை உயிரிழந்த ஆயிரத்து 149 கால்நடைகளுக்கு 42 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நாய்க்கடித்து உயிரிழக்கும் மாடுகளுக்கு, தலா 37 ஆயிரத்து 500 ரூபாயும், ஆடுகளுக்கு தலா 4 ஆயிரம் ரூபாயும் இழப்பீடாக வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

**>>>>>>><<<<<<<**

தெலங்கானாவின் 2025-26ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை அம்மாநில நிதித்துறை பொறுப்பு வகிக்கும் துணை முதலமைச்சர் திரு. மல்லுபட்டி விக்ரமார்க்கா இன்று தாக்கல் செய்தார்.

அம்மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தாக்கல் செய்யப்படும் இரண்டாவது பட்ஜெட் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிதிநிலை அறிக்கையில் அம்மாநில அரசு அறிவித்துள்ள ஆறு வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நிதிஒதுக்கீடு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிதிநிலை அறிக்கையில் அம்மாநில அரசின் மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டப் பணிகள், நகரமயமாக்கல் பணிகள் போன்ற முன்னோடித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**>>>>>>><<<<<<<<**

இந்தியா – மாலத்தீவு இடையே உள்நாட்டு கரன்ஸி அடிப்படையில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து விரைவில் முடிவு செய்யப்படும் என்று மாலத்தீவு அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்நாட்டைச் சேர்ந்த ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் இந்திய ரிசர்வ் வங்கி இதுதொடர்பான சுற்றறிக்கையை ஏற்கனவே வெளியிட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது அமலில் உள்ள வர்த்தக நடைமுறைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று மாலத்தீவு தெரிவித்துள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள், இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் 548 மில்லியன் அமெரிக்க டாலராக அதிகரிக்க உதவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**>>>>>>><<<<<<<<**

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 5 புள்ளி நான்கு சதவீதமாக உயர்ந்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட வலுவான சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக, அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி கணிசமான வளர்ச்சியை கண்டுள்ளதாக அந்நாட்டு புள்ளியியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி சார்ந்த நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதும், உள்நாட்டுக் கடன்கள் மீதான வட்டி விகிதம் குறைந்துள்ளதும், பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>>><<<<<<<<**

சுவிஸ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**Basel** நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-16, 21-17 என்ற செட்கணக்கில் சுவிட்சர்லாந்தின் **Aline Muller** - நெதர்லாந்தின் **Kellyvan** இணையை வென்றது.

**>>>>>>><<<<<<<<**

உலக கோப்பை கபடி போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா போலந்தை எதிர்கொள்கிறது.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டி இன்று பிற்பகல் மணி 2.30-க்கு தொடங்குகிறது.

ஆடவர் பிரிவில் இந்தியா - ஹாங்காங்கை எதிர்கொள்கிறது. இப்போட்டி இரவு ஏழரை மணிக்கு தொடங்குகிறது.

**>>>>>>><<<<<<<<**

அஹமதாபாதில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Bharat Kumaran**, **Iqbal** ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**>>>>>>><<<<<<<<**

கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிக்கான இலச்சினை மற்றும் பாடலை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா வெளியிட்டார்.

**>>>>>>><<<<<<<<**

சர்வதேச பேட்மிண்டன் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் மாள்விகா பன்சூட் ஐந்து இடங்கள் முன்னேறி 23வது இடத்தை பிடித்துள்ளார்.

**>>>>>>>END<<<<<<<**